நகர்மன்றம்
உதகமண்டலம்
**14–12–2020.**

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற டிசம்பர் –2020–ம் மாத அவசரக்கூட்டம் வருகிற **14–12–2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

1. இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள்ள்உட்கட்டமைப்புத் திட்டம் **2020–2021** ன் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிக்காக ரூ.**800.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி கீழ்காணும் சாலை பணிகளை மேற்கொள்ள பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி பிரேரணைகளுக்கு **11–12–2020** அன்று தமிழ்நாடு நகர்புற சாலைகள்ள்உட்கட்டமைப்புத் திட்டம் அனுமதி குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் **2020–2021–** ன் கீழ், உதகமண்டலம் நகராட்சிக்கு கீழ்கண்ட விகிதாச்சார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இதற்குண்டான மன்றத்தின் அனுமதியை பெற்று அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.20557/2020/இ3, நாள்**11–12–2020** கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **சாலையின் பெயர்** | **நீளம் (கி.மி)** | **அகலம் (மீட்டர்)** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்)** |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண்: 30–ல் மகாத்மா காலணி (Reach II) பிஷப் டவுன் சாலை பழைய கார்டன் சாலைகள் தார் சாலை மேம்படுத்தும் பணி மற்றும் மகாத்மா காலணி (Reach I) கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | **2.400** | **4.20** | **164.50** |
| 2 | வார்டு எண் **20,36,22,34** ல் அருள் நகர் சாலை , அன்பு அண்ணா காலனி சாலை, ரிச்சிங் காலனி சாலை, உட்காக் சாலை, தலையாட்டி மந்து பள்ளி சாலைகளில் தார் சாலை மேம்படுத்தும் பணி | **2.300** | **4.50** | **161.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண் 12,14 10ல் கருஷனாஸ் சாலை, மெயின் பஜார் சாலை, ஆன்ஸ் லோஸ் சாலைகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி | **1.950** | **5.50** | **145.50** |
| 4 | வார்டு எண் 3,20,12–ல் அணிக்கொரை சாலை , தமிழகம் சாலைகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி மற்றும் சர்ச்ஹில் சாலை சிமெண்ட் காண்கிரீட் தளம் அமைக்கும் பணி | **2.400** | **5.25** | **168.00** |
| 5 | வார்டு எண் 3,15–ல் மார்லிமந்து சாலை மற்றும் அப்பர் பஜார் சாலைகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி | **2.300** | **5.00** | **161.00** |
| | **மொத்தம்** | **11.350** | | **800.00** |

| **வ.எண்** | **நிதி ஆதாரம்** | **தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | தமிழ்நாடு நகர்புற சாலைகள்ள்உட்கட்டமைப்புத் திட்ட நிதி | ரூ.720.00 |
| **2.** | நகராட்சி பொது நிதி | ரூ. 80.00 |
| **மொத்தம்** | | **ரூ.800.00** |

எனவே மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிகள்ள்மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் கோர தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

**மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணிகளை 2020–2021 ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள்ள்உட்கட்டமைப்புத் திட்ட.த்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதி மான்யம் ரூ.720.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.80.00 இலட்சம் எனும் நிதி பங்களிப்பின் படி திட்டப்பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4457/2020)**
**தீர்மானம் எண். 2403 அனுமதி வழங்கப்பட்டது.**

நகர்மன்றம்
உதகமண்டலம்
**31–12–2020.**

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் டிசம்பர் **2020–**ம் மாத சாதாரண கூட்டம் வருகிற **31.12.2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட **36** வார்டுகளிலும் கடந்த மாதங்களில் உருவான பருவமழை மற்றும் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையினால் மழைநீர் சீராக வெளியேற இயலாமல் பாலங்களில் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் கால்வாய்களில் பழுது ஏற்பட்டதினால் மழைநீர் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மேற்படி பகுதியில் மழையினால் சேதமான கால்வாய்கள், தடுப்புசுவர்கள் மற்றும் நடைபாதைகள் ஆகியவற்றினால் பொதுமக்கள் அடிப்படை வசதிகள் இன்றி மிகுந்த சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, பொதுமக்களின் அடிப்படை வசதிகளின் தேவைகளின் அடிப்படையில் மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிறுபாலங்கள், கால்வாய்கள், நடைப்பாதைகள் மற்றும் தடுப்புச்சுவர் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உரிய மதிப்பீடுகள் தனித்தனியாக தயார் செய்த மொத்த மதிப்பீடு தொகை ரூ.**341.00** இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீட்டினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள நகராட்சியின் நிதி நிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் நிதி திட்டம் **2020–2021** ல் நிதி ஒதுக்கீடு வழங்க கோரி மாநில உயர்மட்ட குழுவில் பொருள் வைத்து நிதி ஒதுக்கீட்டினை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்து உரிய நிதி ஒதுக்கீட்டினை பெற்றுத் தரக்கோரி பிரேரணைகளை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| 1 | எட்டின்ஸ் சாலையில் போஸ்ட் ஆபிஸ் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி | 13.000 | 3.00 | 15.00 |
| 2 | எட்டின்ஸ் சாலையில் கீரின்பீல்டு அருகில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 45.000 | 0.90 | 10.00 |
| 3 | முள்ளிக்கொரை நகராட்சி கழிப்பிடம் அருகில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 55.000 | 1.80 | 1800 |
| 4 | அன்பு அன்னா காலனி சாலை ஒரத்தில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 15.000 | 3.50 | 6.00 |
| 5 | மஞ்சனக்கொரை பகுதியில் தடுப்பு சுவர் | 20.000 | 3.50 | 10.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைக்கும் பணி | | | |
| 6 | அன்பு அன்னா காலனி மயானத்திற்கு நடைபாதை அமைக்கும் பணி | 240.00 | 2.00 | 20.00 |
| 7 | எட்டின்ஸ் சாலையில் ஆனந்த ஆயில் டிப்போ எதிர்புரம் சிறுபாலம் அமைக்கும் பணி | 165.000 | 0.90 | 49.50 |
| 8 | பீட்டன்ஸ் சாலையில் சிறுபாலம் அமைக்கும் பணி | 13.000 | 3.00 | 15.00 |
| 9 | சர்ச்ஹில் சாலையில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 100.000 | 1.20 | 10.00 |
| 10 | தலையாட்டி மந்து சாலையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 25.000 | 5.00 | 30.00 |
| 11 | எச்.எம்.டி முதல் நொண்டிமேடு செல்லும் சாலையில் தடுப்பு சுவர் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி | 100.000 | 3.00 | 35.00 |
| 12 | புதுநகர் கால்வாய் அருகில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 40.000 | 3.00 | 15.00 |
| 13 | சேன்ட்ராக் காலனி பகுதியில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 50.000 | 4.00 | 28.00 |
| 14 | குருசடி காலனி கால்வாய் அருகில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 150.000 | 2.50 | 41.00 |
| 15 | அப்பர் காந்தல்(பேபி ஹால்) தார் சாலை மேம்படுத்தும் பணி | 750.000 | 3.00 | 36.00 |
| | மொத்தம் | | | 341.00 |

அலுவலக குறிப்பு:

1. நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு பருவமழையினால் சேதமான தடுப்புசுவர்கள், நடைபாதைகள், சிறுபாலங்கள் மற்றும் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை உட்கட்டமைப்பு பணிகளை அடிப்படை வசதிகள் உட்கட்டமைப்பு திட்ட நிதியின் மூலம் மேற்கொள்ள மாநில உயர் மட்ட குழுவில் பொருள் வைத்து முழுமான்யமாக நிதி ஒதுக்கீட்டினை பெற்று தரக் கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களால் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணையினை பரிந்துரை செய்து திட்ட நிதி ஒதுக்கீட்டினை பெற்றுப் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. தீர்மானம் எண். 2404 அனுமதி வழங்கப்பட்டது.

**2.** சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (ச13.5(1) துறை அரசாணை (நிலை) எண் 31, நாள் 22.09.2020–ல் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நகர்புறப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்ய ஏதுவாக நகர பஞ்சாயத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களை அமைப்பது தொடர்பாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை நகர மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்காகவும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **மேற்படி அரசாணை பதிவு செய்ய ஒப்புதல் வழங்கலாம்.**
   **(ந.க.எண்.சி10/9245/2020)**
   **தீர்மானம் எண். 2405 அனுமதி வழங்கப்பட்டது.**

**3.** இந்நகராட்சிக்கு சொந்தமான எம்.எஸ். லைனில் உள்ள கடை எண். 6க்கு, திரு.டி.அருள்தாஸ் பிரவீன் என்பவரால், மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு O.SNo.119/2017 க்கு நகராட்சி சார்பாக வழக்காடியமைக்கான வழக்கு கட்டணம் தொகை ரூ.71,000/–ஐ திருமதி.கீதா வழக்கறிஞர் (ந.ச.ஆலோசகர்) அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.அ11/855/2017)**
   **தீர்மானம் எண். 2406 அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட, காந்தல் முக்கோணம் பகுதியில் வார்டு எண்.26ல் அமைந்துள்ள நகராட்சி கட்டிடத்திற்கு, அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007ன் படி, சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.29/– வீதம் 170 சதுர அடிக்கு ரூ.4, 930/– என நிர்ணயம் செய்து ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/5523/2020)**
   **தீர்மானம் எண். 2407 அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.டி.10 எண் 20280/2020 நாள். 03.12.2020ல் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு நகராட்சி பங்கு தொகை ரூ.2500/–ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2020–2021ம் ஆண்டிற்கான நகராட்சி பங்கு தொகை ரூ.2500/–ஐ இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிக்கு செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.சி1/10686/2020)**
   **தீர்மானம் எண். 2408 அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** உதகமண்டலம் நகராட்சியில் 36 வார்டுகளில், 27 வார்டுகளில் தற்போது பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. மேற்கண்ட இடங்களில் பாதாள சாக்கடை பராமரிப்பு மேற்கொள்ள போதிய பணியாட்கள் இல்லாததால் முறையாக குறித்த நேரத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள இல்லாத நிலை உருவாகி உள்ளது. எனவே மேற்படி பகுதியில் சுகாதாரம் கெடும் நிலை உருவாகி உள்ளது.

எனவே 27 வார்டுகளில் வாழும் பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனம் மூலம் பணியாட்களை விநியோகம் செய்யும் நடைமுறை கடந்த 3 ஆண்டுகளாக நடைமுறைபடுத்துப்பட்டு வருகிறது.

எனவே எதிர்வரும் ஜனவரி 2021 முதல் ஜனவரி 2022 வரை ஒராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தினமும் 7 நபர்கள் வீதம் மொத்தம் 2450 மனித நாட்களுக்கு தனியார் நிறுவனம் மூலம் மேற்படி வார்டுகளில் காந்தல் பகுதி தவிர்த்து நகர் பகுதிகளுக்கு பணியாட்கனை விநியோகம் செய்யும் வகையில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு செய்யும் வகையில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.23.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்த மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **27 வார்டு பாதாள சாக்கடை திட்டத்தில் காந்தல் பகுதி நீங்கலாக நகர் பகுதி பராமரிப்பு பணிக்கு தனியார் நிறுவனம் மூலம் பணியாட்களை விநியோகம் செய்ய மேற்படி மதிப்பீட்டின்படி அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10699/2020)**
   **தீர்மானம் எண். 2409 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** உதகமண்டலம் நகராட்சியில் **36** வார்டுகளில், **27** வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு இல்லாததால், மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் செய்ய காலதாமதம் ஆகிறது. இதனால் பொது சுகாதராம் சீர்கெடும் நிலை உள்ளது.

எனவே மேற்படி பாதாள சாக்கடை நடைமுறையில் உள்ள அதிக மக்கள் தொகை உள்ள காந்தல் பகுதியில் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் பணியாட்கள் விநியோகம் செய்யும் முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எனவே எதிர்வரும் டிசம்பர் **2020** முதல் டிசம்பர் **2021** வரை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தினமும் **6** நபர்கள் மொத்தம் **2130** மனித நாட்களுக்கு விநியோகம் செய்யும் வகையில் தனியார் நிறுவனம் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**20.00** லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கு தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை விநியோகம் செய்ய மேற்படி மதிப்பீட்டின்படி அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

   **(ந.க.எண்.இ5/10698/2020)**

   **தீர்மானம் எண். 2410 அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** உதகமண்டலம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள JCB வாகனம் TN43E1203 உள்ளது. இவ்வாகனம் தூர் வருதல், மண் அகற்றுதல், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உடைப்பு சரி செய்தல், சாலை மண் சரிவு அகற்றம் போன்ற பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி வாகனத்திற்கு தற்போது நகராட்சியில் ஓட்டுனர்/ இயக்குநர் இல்லை. மேலும் தற்போதுள்ள ஓட்டுனர்களை இந்த வாகனம் ஓட்ட/ இயக்க உபயோகப்படுத்த இயலாத நிலை உள்ளது.

எனவே மேற்படி JCB வாகனத்தை இயக்க தொழில்நுட்பம் தெரிந்த தேர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த நபர் ஒருவரை (JCB Operator) தனியார் நிறுவனத்திடம் இருந்து விநியோகம் செய்து மேற்படி வாகனத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது.

எனவே மேற்படி JCB Operator–யை தனியார் நிறுவனத்திடம் இருந்து விநியோகம் செய்யும் வகையில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**4.20** லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **தனியார் நிறுவனத்திடம் இருந்து JCB Operator-யை விநியோகம் செய்ய மேற்படி மதிப்பீட்டின்படி அனுமதிக்கலாம்.**
2. **இப்பணிக்கு குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10700/2020)**
   **தீர்மானம் எண். 2411 அனுமதி வழங்கப்பட்டது.**

**9.** சுவிட்ச் பாரத் மிஷன் 2015–16 நிதியாண்டின் கீழ் உதகமண்டலம் நகராட்சிக்கு 35 டன் திறன் கொண்ட திடக்கழிவுகளை கையாண்டு உரம் தயாரிக்கும் சேமிப்பு அறை மற்றும் மெஷினரிகளை நிறுவும் பணிக்கு ரூ.307.00 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்பொழுது அனைத்து விதமான உட்கட்டமைப்பு வசதி பணிகள் அனைத்தும் முடிவு பெற்றுள்ளன. தற்பொழுது அந்த மெஷினரிகளை நிறுத்தப்பட்டு இயக்குவதற்கு தேவையான மின்சாரம் குறித்து ஏற்கனவே உள்ள புதிய LTCD மின் இணைப்பில் இருந்து கூடுதல் மின் அழுத்தம் (110 KW) கொண்ட மின் இணைப்பாக பெறுவதற்கு மின் வாரியத்தில் புதியதாக மின் மாற்றி அமைத்து மின்சாரம் வழங்கப்பட உள்ளதால் மின் வாரியத்தின் மூலம் மின்இணைப்பு வழங்கும் மின் மாற்றியிலிருந்து மீட்டர் பாக்ஸ் மற்றும் மெயின் சுவிட்ச் போர்டு பாக்ஸ் Demand control unit முதலிய மின் இணைப்பு பணிகளை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.13,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.13.00 லட்சம் மதிப்பீட்டு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **உரக்கிடங்கில் திடக்கழிவுகளை கையாளும் பணிக்கு உரிய மெஷினரிகளை நிறுவப்பட்டுள்ளதாலும், Biomining பணிக்கு மெஷினரிகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதினால் மேற்படி மெஷினரிளை இயக்குவதற்கு மின்சாரம் வழங்கும் பணி மின்வாரியத்தில் நடைபெற்று வருவதினால் வழங்கப்படும் மின்சாரத்தினை மெஷினரிகளுக்கு இணைப்பு வழங்க மின்வாரிய மின் மாற்றியில் இருந்து மெயின்ஸ்விட் பேனல் போர்டு வரை மின் இணைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் குறித்து மேற்படி பணியினை உடன் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10125/2020)**
   **தீர்மானம் எண். 2412 அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.பி1/ 552/2019, நாள்.31.10.2020 MLACDS 2020–21ம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சி மார்கெட்டில் கடைகளுக்கு மேற்கூரை GI Sheet அமைக்கும் பணி | ரூ.5.00 |
| 2 | வார்டு எண்.11–ல் முஸ்லிம் மயானம் மான் பூங்கா அருகில் (South Lake Road) சுற்று சுவர் அமைக்கும் பணி | ரூ.2.00 |

வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ளள பணிக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.9388/2020/இ5 நாள்.28.10.2020ல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சம் என குறிப்பிட்டு நிதி ஒதுக்கீடு வழங்க கோரியதில் மேற்படி செயல்முறை உத்திரவில் தற்பொழுது MLACDS 2020–21ம் ஆண்டு நிர்வாக அனுமதியில் ரூ.2.00 இலட்சம் மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே சுற்று சுவர் கட்டும் பணிக்கு சமர்ப்பித்த மதிப்பீட்டின் படி மீதமுள்ள ரூ.2.00 இலட்சம் தொகையினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் நகராட்சி நிதியுடன் சேர்த்து மதில் சுவர் கட்டும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்தின் படி திருத்திய நிர்வாக அனுமதி கோரி பிரேரணையினை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்ககலாம்.**
2. **வரிசை எண்.2ல் உள்ள பணிக்கு ரூ.2.00 இலட்சம் வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேலும், மதிப்பீட்டு தொகையின் படி திருத்திய நிர்வாக அனுமதி கோரி மாவட்ட ஆட்சியர், நீலகிரி அவர்களுக்கு பிரேரனைகளை சமர்ப்பிக்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/9388/2020)**
   **தீர்மானம் எண். 2413 அனுமதி வழங்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி உரக்கிடங்கில் தற்போது திடக்கழிவுகளை கையாளும் மெஷினரிகள் (Processing unit) சப்ளை செய்து பொருத்தி அதன் மூலம் திடக்கழிவுகளை கையாண்டு உரமாக்க மாற்றுதல் மற்றும் பயன்படுத்தாத குப்பைகளை அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ளவும் Biomining முறையில் பழைய குப்பைகளை அப்புறப்படுத்தவும் மெஷினரிகளை இயக்க பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்களின் திறனுக்கேற்ப உள்ள மின் இணைப்பு எண் 680ல் கூடுதலாக 105.00KW திறன் கொண்ட 110KW திறனில் LTCT மின் இணைப்பு பெறவும் அதேபோல் உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ள பழைய குப்பைகளை (Legacy Waste) Biomining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு 110KW மின் அழுத்தம் கொண்ட இணைப்பு வழங்க ரூ.11,31,099/–க்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்தவும் முன் அனுமதி பெற்ற அவசர அவசியம் கருதி செலுத்த தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **Deposit** | **-** | **Rs.63, 600/-** |
| **Development Charge** | **-** | **Rs.2, 65,000/-** |
| **Estimate Charge** | **-** | **Rs.7, 99,410/-** |
| **Meter caution Deposit** | **-** | **Rs.3, 000/-** |
| **Testing Fees** | **-** | **Rs.75/-** |
| **CGST** | **-** | **Rs.675/-** |
| **SGST** | **-** | **Rs.675/-** |
| **Rounding off** | **-** | **Rs.5/-** |
| **Total** | **-** | **Rs.11, 31,099/-** |

அலுவலக குறிப்பு :–

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி கூடுதலாக திறன் கொண்ட மின் இணைப்பு பெற்று **Biomining** பணி மற்றும் தினசரி உற்பத்தியாகும் திடக்கழிவுகளை கையாள நிறுவப்பட்டுள்ள மெஷினரிகளை இயக்கி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை அமுல்படுத்த மின் இணைப்பில் கூடுதல் திறன் கொண்ட மின் அழுத்தம் பெறும் பணிக்கு மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு மின் கட்டண தொகை ரூ.11,31,099/–யை நகராட்சிகளின் மின் கட்டண நிலுவைக்காக 2020–2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.402.00 இலட்சத்தில் இருந்து செலுத்தவும் நகராட்சி நிதி நிலை முன்னேற்மடைந்தவுடன் மேற்படி தொகையினை நகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.இ4/**4736**/2020)
   தீர்மானம் எண். 2414 அனுமதி வழங்கப்பட்டது.

12. இந்நகராட்சியில் 74–வது சுதந்திர தின விழா – ATC சதுக்கத்தில் கொண்டாடப்பட உள்ளதால் மேற்கண்ட இடத்தில் உள்ள சுவற்றிற்கு வர்ணம் பூசி புதுப்பிக்கவும் அலங்கார தோரணங்கள், கொடி, Flex, MS angle flex கட்டுவதற்கு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.68,000/–க்கு பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. அனுமதி வழங்ககலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.
4. தீர்மானம் எண். 2415 அனுமதி வழங்கப்பட்டது.

**13.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண். ந.க.எண். **5060/2020** தி1, நாள்.**03.12.2020**–ல் சட்ட பேரவை விதி **110**–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையின் படி நகராட்சி பகுதியில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்த வெளி உடற்பயிற்சிகூடம் மற்றும் உபகரணங்கள் பொருத்தி பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே லோயர் பஜார் சுபாஷ் சந்திரபோஸ் பூங்காவில் மேற்கண்ட பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**10.00** இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வருவாய் நிதி / பொது நிறுவனங்களின் தனியார் பங்களிப்பு தொகையில் பணி மேற்கொள்ளவும் தனி அலுவலர்அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர்அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட பணி என்பதால் பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **தீர்மானம் எண். 2416 அனுமதி வழங்கப்பட்டது.**

**14.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண். ந.க.எண். **5060/2020** தி1, நாள்.**03.12.2020**–ல் சட்ட பேரவை விதி **110**–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையின் படி நகராட்சி பகுதியில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் **120** சதுர மீட்டர் பரப்பளவிற்கு யோகா மையக் கட்டிடங்கள் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே நகராட்சி எல்லைக்குட்பட்ட லோயர் பஜார் பகுதியில் சுபாஷ் சந்திரபோஸ் பூங்காவில் மேற்கண்ட பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**35.00** இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வருவாய் நிதி / பொது நிறுவனங்களின் தனியார் பங்களிப்பு தொகையில் பணி மேற்கொள்ளவும் தனி அலுவலர்அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர்அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட பணி என்பதால் பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **தீர்மானம் எண். 2417 அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு **18.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சி பகுதிகளில் நகர் உள்ள பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கு தேவையான பணியாளர்களை விநியோகம் செய்யும் பணி | **23.00** |

| **வ. எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர்** |
|---|---|---|
| 1 | M/S Global Environment System அவர்கள் மதிப்பீட்டை விட 0.002% குறைவு | M/S Global Environment System அவர்கள் மதிப்பீட்டை விட 0.002% குறைவு |
| 2 | திரு.கே.இ.கிருஷ்ணாதாஸ் அவர்கள் மதிப்பீட்டை விட 2.28% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் குறைந்த தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர் மூலம் பணியினை செய்து முடிக்கவும் அதற்கான பணி ஆணை வழங்கியதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண் இ5/10699/2020)**
   **தீர்மானம் எண். 2418 அனுமதி வழங்கப்பட்டது.**

**16.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு **18.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சி பகுதிகளில் காந்தல் பகுதி உள்ள பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கு தேவையான பணியாளர்களை விநியோகம் செய்யும் பணி | **20.00** |

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | M/S Star Contractors அவர்கள் மதிப்பீட்டை விட 0.002% குறைவு | M/S Star Contractors அவர்கள் மதிப்பீட்டை விட 0.002% குறைவு |
| 2 | திரு.ஆர்.ரகு அவர்கள் மதிப்பீட்டை விட 2.28% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம். (ந.க.எண் இ5/10698/2020)**
   **தீர்மானம் எண். 2419 அனுமதி வழங்கப்பட்டது.**

**17.** இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு 18.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 6 விநாயகர் கோவில் பின்புறம் மேல் கோடப்பமந்து பகுதியில் தடுப்புசுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் பணி | 9.95 |

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட 0.02% குறைவு | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2 | திரு.என்.அர்ஜுன் அவர்கள் மதிப்பீட்டை விட 0.93% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண் இ5/10702/2020)**
   **தீர்மானம் எண். 2420 அனுமதி வழங்கப்பட்டது.**

**18.** இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு **18.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | வார்டு எண் **6** விநாயகர் கோவில் பின்புறம் மேல் கோடப்பமந்து பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | **5.95** |

| **வ. எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர்** |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட **0.03%** குறைவு | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட **0.03%** குறைவு |
| 2 | திரு.என்.அர்ஜுன் அவர்கள் மதிப்பீட்டை விட **0.51%** அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண் இ5/10701/2020)**
   **தீர்மானம் எண். 2421 அனுமதி வழங்கப்பட்டது.**

**19.** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் வில்லோ பௌண்ட் சாலையில் பக்கவாட்டு சுவருடன் கூடிய கால்வாய் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூபாய் **4.90** இலட்சத்திற்கு தீர்மான எண் **2153** நாள். **30.06.2020**–ல் ஒப்புதல் பெற்று பணியினை மேற்கொள்ள அன்று ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்றபொருள் தயார் செய்ததில் பணியின் பெயரினை தவறுதலாக எழுதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ராஜசேகரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்ற தீர்மான எண்.**2275**நாள்.**30.09.2020** அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானத்தில் ஏற்றுக்கொண்ட ஒப்பந்ததாரரின் வில்லோ பௌண்ட் சாலையில் பக்கவாட்டு சுவருடன் கூடிய கால்வாய் காட்டும் பணிக்கான ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளிளை

ஏற்றுக்கொண்டுள்ளதால், தற்போது கீழ்காணும் பணியின் பெயர் தவறாக உள்ளதை சரிசெய்து, மேற்படி விவரப்படி உரிய பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் படி பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வில்லோ பௌண்ட் சாலையில் பக்கவாட்டு சுவருடன் கூடிய மேற்பரப்பு வடிகால் கட்டுதல் பணி | 4.90 |

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | திரு.பி.ராஜசேகரன் அவர்கள் மதிப்பீட்டை விட 0.14% குறைவு | திரு.பி.ராஜசேகரன் அவர்கள் மதிப்பீட்டை விட 0.14% குறைவு |
| 2 | திரு.பி.மரியராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட 2.06% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

1. **ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்றபொருள் தயார் செய்ததில் பணியின் பெயரினை தவறுதலாக எழுதி ஒப்புதல் பெறப்பட்டதை மாற்றி மேற்காணும் விபரப்படி உரிய பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்த ப்புள்ளியின்படி பணி மேற்கொள்ள பணி ஆணை வழங்க அனுமதிக்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் இ5/5511/2020)**
   **தீர்மானம் எண். 2422 அனுமதி வழங்கப்பட்டது.**

20. இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு 18.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சி வார்டு எண் 35 வேலிவியூ பகுதி அச்சனகல் செல்லும் சாலைக்கு சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் பணி | 6.80 |

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட 0.01% குறைவு | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.என்.அர்ஜுன் அவர்கள் மதிப்பீட்டை விட 0.48% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
